# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. தொலைபேசி எண்: 24347590**


ஆணை நாள் 16.09.2019

**முன்னிலை**

## முனைவர் ரா.பிரதாப்குமார்

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 4430/B/18 & SA 7202/B/18**

திரு.P.அழகப்பன் மேல்முறையீட்டாளர்

எதிர்

பொதுத் தகவல் அலுவலர்/
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
ஆத்தூர்,
சேலம் மாவட்டம்.
பொது அதிகார அமைப்பு

## ஆணை

இவ்வாணையத்தால் இன்று (16.09.2019) நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் திரு.P.அழகப்பன் அவர்கள் ஆணையத்தின் அழைப்பாணை பெற்றுக் கொண்டு எவ்வித முகாந்திரமுமின்றி ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறைகள்) விதிகள், 2012 விதி 7ன்படி, மனுதாரர் விசாரணைக்கு ஆஜராக வேண்டுமென்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மனுதாரரின் வருகையின்மை ஆணையத்தால் பதிவு செய்யப்படுகிறது. பொதுத் தகவல் அலுவலர், திரு A. அன்புசெழியன், வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், ஆத்தூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், சேலம் மாவட்டம் அவர்கள் இன்றைய விசாரணைக்கு ஆஜரானார்.

**வழக்கு எண் SA 4430/B/18**

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 19.03.2018 தேதியிட்ட மனுவில், 17.04.2017ல் தன்னுடைய பெயரில் (அழகப்பன்), பெத்தநாயக்கன்பாளையம் வட்டம், காளிச்செட்டியூர் கிராமம், சர்வே எண் 138/9ஜ உட்பிரிவு செய்து தனிப்பட்டா வழங்க உத்திரவிட கோரி தன்னுடைய விண்ணப்பம் தங்களுக்கு கிடைக்கப் பெற்ற தேதி மற்றும்

அதன்மீது கோட்டாட்சியர், ஆத்தூர் அவர்களால் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரம் கேட்டும், பெத்தநாயக்கன்பாளையம் வட்டம், காளிச்செட்டியூர் கிராமம், சர்வே எண் 138/9ஜ உட்பிரிவு செய்து தனிப்பட்டா வழங்கக் கோரும் மனு சம்மந்தமாக பெத்தநாயக்கன்பாளையம் வட்ட சார் ஆய்வாளர் அவர்களின் அறிக்கை தங்கள் அலுவலகத்திற்கு எந்த தேதியில் கிடைக்கப் பெற்றது என்ற விவரம் குறித்தும், பெத்தநாயக்கன்பாளையம் வட்டாட்சியரின் ந.க. எண் 2283/17, நாள் 08.08.2017 மற்றும் 30.11.2017 தேதியிட்ட குறிப்பாணையினை எதிர்த்து மேல்முறையீடு செய்த தன்னுடைய 23.01.2018ந் தேதிய மேல்முறையீட்டு மனு தங்களுக்கு கிடைக்கப்பெற்ற தேதி விவரம் குறித்தும், மேலும் இது சம்பந்தமாகவே 11 இனங்களில் தகவல் கோரி சேலம் மாவட்டம், ஆத்தூர் கோட்டாட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு மனு செய்துள்ளார். தமக்கு தகவல் கிடைக்கப் பெறாததால் மனுதாரர், தான் கோரியுள்ள தகவல்களை தனக்கு பெற்றுத் தருமாறு தெரிவித்து 08.05.2018 தேதியிட்ட தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை சேலம் மாவட்டம், ஆத்தூர் கோட்டாட்சியர் அலுவலக மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பி வைத்துள்ளார். மேல்முறையீட்டு மனுவிற்குப் பின்னும் தகவல் கிடைக்கப் பெறாததால் மனுதாரர் 18.06.2018 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

**<u>வழக்கு எண் SA 7202/B/18</u>**

3. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 09.05.2018 தேதியிட்ட மனுவில், 17.04.2017ல் தன்னுடைய பெயரில் (அழகப்பன்), பெத்தநாயக்கன்பாளையம் வட்டம், காளிச்செட்டியூர் கிராமம், சர்வே எண் 138/9ஜ உட்பிரிவு செய்து தனிப்பட்டா வழங்க உத்திரவிட கோரி தன்னுடைய விண்ணப்பம் தங்களுக்கு கிடைக்கப் பெற்ற தேதி மற்றும் அதன்மீது கோட்டாட்சியர், ஆத்தூர் அவர்களால் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரம் கேட்டும், பெத்தநாயக்கன்பாளையம் வட்டம், காளிச்செட்டியூர் கிராமம், சர்வே எண் 138/9ஜ உட்பிரிவு செய்து தனிப்பட்டா வழங்கக் கோரும் மனு சம்மந்தமாக பெத்தநாயக்கன்பாளையம் வட்ட சார் ஆய்வாளர் அவர்களின் அறிக்கை தங்கள் அலுவலகத்திற்கு எந்த தேதியில் கிடைக்கப் பெற்றது என்ற விவரம் குறித்தும், பெத்தநாயக்கன்பாளையம் வட்டாட்சியரின் ந.க. எண் 2283/17, நாள் 08.08.2017 மற்றும் 30.11.2017 தேதியிட்ட குறிப்பாணையினை எதிர்த்து மேல்முறையீடு செய்த தன்னுடைய 23.01.2018ந் தேதிய மேல்முறையீட்டு மனு தங்களுக்கு கிடைக்கப்பெற்ற தேதி விவரம் குறித்தும், மேலும் இது சம்பந்தமாகவே 11 இனங்களில் தகவல் கோரி சேலம் மாவட்டம், ஆத்தூர் கோட்டாட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு மனு செய்துள்ளார். தமக்கு தகவல் கிடைக்கப் பெறாததால் மனுதாரர், தான் கோரியுள்ள தகவல்களை தனக்கு பெற்றுத் தருமாறு தெரிவித்து 18.06.2018 தேதியிட்ட தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை சேலம் மாவட்டம், ஆத்தூர் கோட்டாட்சியர் அலுவலக மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பி வைத்துள்ளார். மேல்முறையீட்டு மனுவிற்குப் பின்னும் தகவல் கிடைக்கப் பெறாததால் மனுதாரர் 01.10.2018 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (16.09.2019) இவ்வாணையத்தால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. மனுதாரர் ஒரே பொருள் தொடர்பான தகவலை கேட்டு, இரண்டு இரண்டாவது மேல்முறையீட்டு மனுக்களை இவ்வாணையத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். இரண்டு

மேல்முறையீட்டு மனுக்களும் ஒரே பொருள் தொடர்பாக இருப்பதால், ஒருசேர இன்று (16.09.2019) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் பெத்தநாயக்கன்பாளையம் வட்டம், காளிச்செட்டியூர் கிராமம், சர்வே எண் 138/9ஐ தனது பெயருக்கு உட்பிரிவு செய்து தனிப்பட்டா வழங்க கோரியதன்பேரில், மேற்படி புலத்தினை பெத்தநாயக்கன்பாளையம் வட்டாட்சியர் அலுவலக 8A/306/1428 நாள் 138/9A (பட்டா எண் 2007)ன்படி திரு.அழகப்பன் பெயரில் தனிப்பட்டா வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்து, அதன் நகலை ஆணையத்தில் சார்வு செய்தார். கோப்பினை பரிசீலிக்கையில், மனுதாரர் கோரியுள்ள தகவல் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது என்பது ஆணையத்தால் அறிய முடிகிறது.

6. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் நேரில் ஆஜராகி தமது கருத்தை தெரிவிக்க தவறியுள்ளார். இதனை ஆணையம் பதிவு செய்து, மேற்கண்ட சூழ்நிலையில், வழக்கின் விசாரணை முற்றாக்கப்படுகிறது.

**ஒம்/-ரா.பிரதாப்குமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 4430/B/18 & SA 7202/B/18</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
ஆத்தூர், சேலம் மாவட்டம்.

திரு.P.அழகப்பன்,
த/பெ.பச்சமுத்து உடையார்,
எண்.13/17, காளிச் செட்டியூர்,
பெத்தநாயக்கன்பாளையம் அஞ்சல் & வட்டம்,
சேலம் மாவட்டம்.

Copy to: File / Stock File
SC/PA/17.09.2019